# பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு
# இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்
# இலங்கை தேயிலை சபை

# வெற்றிடங்கள்

## கொள்வனவு உத்தியோகத்தர் (பதவி 01)

தலவாக்கலை, இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையத்தில் பின்வரும் பதவிக்காக இலங்கை பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தொழில் விபரம் :**

பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்)/ சிரேஷ்ட நிர்வாக அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் பொருட்கள் மற்றும் சேவைகளின் செலவு, பண்பு, காலம், ஆயுள் ஆகியவற்றை கருத்தில்கொண்டு அரசின் அங்கீகாரம் பெற்ற பெறுகை செயற்பாட்டை பின்பற்றி அனைத்து பொருட்கள் மற்றும் சேவையின் பெறுகைக்கு பொறுப்பு வகிப்பார்.

**வெளிவாரி (கீழுள்ள 01 அல்லது 02)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மூலம் அங்கீகரிக்கப்பட்ட இந்த பதவியின் விடயப்பரப்புக்கு தொடர்புடைய நிதி/ கணக்கியல்/ வழங்கல் சங்கிலி முகாமைத்துவம்/ வர்த்தக முகாமைத்துவம்/ ஏற்பாட்டியல் முகாமைத்துவம்/ வணிகம்/ வர்த்தக நிர்வாகத்தில் இளமாணி பட்டம் அல்லது தொடர்புடைய வேறு ஏதேனும் பட்டம்.
2. பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் இடைநிலை பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

**உள்வாரி (கீழுள்ள 01 அல்லது 02) :**

1. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கு தேவையான தகைமைகளை பெற்றிருத்தல்.
2. பதவிக்கு தொடர்புடைய விடயப்பரப்பில் தரம் II இல் தொழில்நுட்பம் அல்லாத பிரிவில் முகாமைத்துவ உதவியாளர் பதவி ஒன்று (MA 1-2)/ தொழில்நுட்ப பிரிவு முகாமைத்துவ உதவியாளர் பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு:** JM 1-2 (2016) Rs. 43,355/- 10 x 755 - 18 x 1,135 – ரூபா 71,335/-

**வயது** : 22 வயதுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதோடு 45 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**தேர்வு முறை :** எழுத்து போட்டிப் பரீட்சை அல்லது/ மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை ஒன்றின் மூலம்

**மற்ற நன்மைகள்:**

i. இருப்பதாயின் தங்குமிடம் (முழுமையான தளபாடங்களிலான உத்தியோகபூர்வ இல்லம்) வழங்கப்படும் அல்லது தங்குமிடத்திற்கு பதில் கொடுப்பனவு ஒன்று வழங்கப்படும்.

ii. நிறுவனத்தின் மருத்துவ திட்டத்தின் விதிகளுக்கு அமைய மருத்துவ நன்மைகள் வழங்கப்படும்.

iii. சேம நிதியம்: தேர்வு செய்யப்பட்ட ஊழியர் சேம நிதியத்திற்கு சம்பளத்தின் 10% சம்பள பங்களிப்பை செய்தல் வேண்டும் என்பதோடு நிறுவனம் 15% பங்களிப்புச் செய்யும். ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு நிறுவனம் 3% பங்களிப்பையும் செய்யும்.

iv. தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் பதவிக்கு பொருந்தும் மற்ற நன்மைகள்

இந்தப் பதவி ஸ்தீரமானதாகும். பூர்த்தி செய்யப்பட்ட சுயவிபரக் கோவையுடன் பிறப்புச் சான்றிதழின் பிரதி, குறித்த கல்வி, தொழில் தகைமைகளின் பிரதிகள், சேவை சான்றிதழ்கள் மற்றும் விண்ணப்பதாரர் தொடர்பில் கேட்டறிய முடியுமான உறவினர் அல்லாத இருவரினது பெயர் மற்றும் முகவரிகளுடன் 2025 ஜனவரி 06 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் கிடைப்பதற்கு வகை செய்தல் வேண்டும்.

அரச சேவை/ கூட்டுத்தாபனம்/ சட்டரீதியான சபைகளின் அதிகாரிகளின் விண்ணப்பங்கள் குறித்த நிறுவனத்தின் தலைவர் ஊடாக அனுப்ப வேண்டும். இந்தத் தேவைக்கு அமையாத விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கு வாய்ப்பு உள்ளது. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

தேவையான மேலதிக விபரங்களுக்கு தேயிலை ஆராய்ச்சி நிலையத்தின் இணையதளமான www.tri.lk விற்கு பிரவேசிக்கவும்.

**பணிப்பாளர்/ தலைமை நிர்வாக அதிகாரி**
**இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம்**
**சென் கூம்ஸ், தலவாக்கலை**